# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண்.347/2007

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு செப்டம்பர் மாதம் 04 -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 04.09.2023**

**பெயர் - தசரதராம ரெட்டி**

**த/பெ - செங்கா ரெட்டி**

**வயது - 92**

**சாட்சி - PW1**

**ஊர் - நாலூர் கிராமம்**

**தொழில் - ஓய்வில் உள்ளேன்**

**விசாரணை தொடங்கும் நேரம்- 12.31 p.m.**

**முதல் விசாரணை -**

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமான பத்திரம் மற்றும் கூடுதல் பிரமான பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. (1). 29.12.1984 தேதியிட்ட என் பெயருக்கு கோட்ட துணை ஆய்வாளர் அவர்கள் அனுப்பிய அறிவிப்பின் அசல் **(வாசா ஆ 1) (மேற்படி ஆவணம் வழக்கு சொத்து குறித்து சம்மந்தமில்லா ஆவணம் என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்பேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(2). 21.08.1985 தேதியிட்ட கோட்டாச்சியர், சைதாபேட்டை அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதம் ந.க. எண் 4096/1982 ன் அசல் **(வாசா ஆ 2) (மேற்படி ஆவணம் வழக்கு சொத்து குறித்து சம்மந்தமில்லா ஆவணம் என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்பேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(3). என் சார்பாக எனது வழக்கறிஞர் 04.06.2007 அன்று 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு மற்றும் 10ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **(வாசா ஆ 3)** ஆகவும்,

(4). மேற்படி அறிவிப்பினை முதல் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அசல் அஞ்சல் உரை **(வாசா ஆ 4)** ஆகவும்,

(5). மேற்படி அறிவிப்பினை 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டமைக்கான 06.06.2007 தேதியிட்ட அசல் அஞ்சல் ஒப்புகை அட்டை **(வாசா ஆ 5)** ஆகவும்,

(6). மேற்படி அறிவிப்பினை மூன்றாம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அசல் அஞ்சல் உரை **(வாசா ஆ 6)** ஆகவும்,

(7). 15.06.2007 தேதியிட்ட கிரைய பத்திரம் ஆவண எண் 6797/2007 என பதிவு அலுவலகம் சார் பதிவாளர் பொன்னேரியில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **(வாசா ஆ 7)** ஆகவும்,

(8). 10.09.2008 தேதியிட்ட கிரைய பத்திரம் ஆவண எண் 6525/2008 என பதிவு அலுவலகம் சார் பதிவாளர் பொன்னேரியில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **(வாசா ஆ 8)** ஆகவும்,

(9). 18.04.2007 தேதியிட்ட பொது அதிகார ரத்து பத்திரம் ஆவண எண் 2003/2007 என திருவொற்றியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் அசல் **(வாசா ஆ 9)** ஆகவும்,

(10). 18.08.2009 தேதியிட்ட எனது வழக்கறிஞரால் பிரதிவாதிகள் 1 முதல் 3 மற்றும் 10 முதல் 12 ஆகியோருக்கு அனுப்பட்ட சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அதற்கான அசல் அஞ்சல் ரசீதுகள் 6 எண்ணிக்கைகள் **(வாசா ஆ 10)** (வரிசை 1 முதல் 7

வரையிலானது) ஆகவும்,

(11). மேற்படி 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட அறிப்பு அவர்களுக்கு சார்வு செய்யப்படாமல் திருப்பப்பட்டதற்கான அசல் அஞ்சல் உரைகள் 3 எண்ணிக்கைகள் **<u>(வாசா ஆ 11)</u>** (வரிசை 1 முதல் 3 வரையிலானது) ஆகவும்,

(12). மேற்படி அறிவிப்பினை 11 மற்றும் 12ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அசல் அஞ்சல் ஒப்புகை அட்டை **<u>(வாசா ஆ 12)</u>** (வரிசை 1 முதல் 2 வரையிலானது) ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம்- 01.12 p.m.**